விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 298 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 26 சனிக்கிழமை (12.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# வடக்கில் தேர்தலில் அதிகளவானோர் குதிப்பு

## யாழில் 6 ஆசனங்களுக்கு 396 பேர் களத்தில்



*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 396 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர் என யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னி மாவட்டத்தில் 423 பேர் போட்டி

*(வவுனியா)*

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 423 பேர் போட்டியிடவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான பீ.ஏ. சரத் சந்திர தெரிவித்தார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*



## ஜனநாயகத் தமிழரசு யாழில் வேட்புமனு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலால் அதிருப்தியடைந்த குழுவால் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு 15


## தமிழர் விடுதலைக் கூட்டணி யாழில் வேட்புமனுத் தாக்கல்



15

## மக்கள் நலனுக்காகச் செய்யப்படும் பணிகளுக்கு ஆதரவு தரப்படும்

### ஜனாதிபதியிடம் சமந்தா பவர்



*(கொழும்பு)* மக்கள் நலனுக்காகச் செய்யப்படும் பணிகளுக்கு முழுமையான ஆதரவு தரப்படும் என சமந்தா பவர் ஜனாதிபதி அநுர குமாரவிடம் உறுதியளித்துள்ளார்.

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## 22 தேர்தல் மாவட்டங்களில் 690 குழுக்கள் போட்டி

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

2024 பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் 690 குழுக்கள் போட்டியிடப் போவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

74 வேட்புமனுக்கள் நிரா 15

## யாழ்.போதனாவில் பிறந்து ஒரு நாளான ஆண் சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

பிறந்து ஒரு நாளேயான ஆண் சிசு ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது. 15

## வவு. வாள்வெட்டு மேலும் ஒருவர் மரணம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் இடம்பெற்ற வாள்வெட்டில் படுகாயமடைந்த மற்றைய நபரும் நேற்று உயிரிழந்துள்ளார்.

ஓமந்தை, கதிரவேலு 02




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீரங்கா வேட்பு மனுத் தாக்கல்

(வவுனியா)

வன்னித்தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவினை ஸ்ரீரங்கா நேற்று தாக்கல் செய்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளு மன்றத் தேர்தலில் ஸ்ரீரங்கா தலைமையிலான வேட்பாளர்கள் குழு சுயேட்சையாக போட்டியிடுகின்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் நேற்றுக் காலை வேட்புமனுவினைத் தாக்கல் செய்திருந்தது.

இதன்போது போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் வருகை தந்திருந்தனர். (ம-7,250)

## வவு.வாள்...

பூவரசன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (10) காணி பிணக்கு காரணமாக இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் மரணமடைந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

வவுனியா, ஓமந்தை, கதிரவேலுபூவரசன்குளம் பகுதியில் காணி தொடர்பான முரண்பாடு வியாழக்கிழமை (10) வாள்வெட்டில் முடிந்தது.

குறித்த காணியில் மாமன் மற்றும் மருமகன் ஆகிய இருவரும் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த நபர்கள் இருவர் மீதும் மிளகாய்த்தூளை அள்ளி வீசி வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதாக ஊர்மக்கள் தெரிவித்தனர்.

இதன்போது இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளங்கோ (வயது 38) என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன், 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான ரூ.திலீபன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில்,

அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பேராசிரியர்.சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் நினைவுப்பேருரை – 2024

பேருரைத் தலைப்பு :

"சக்தி சேமிப்புச் சாதனங்களும் இரசாயனவியலாளர்களின் வகிபாகமும்"

பேருரை வழங்குனர் :

பேராசிரியர்.எச்.எம்.என்.பண்டார,
இரசாயனவியல் துறையில் சிரேஸ்ட பேராசிரியர் (ஓய்வுபெற்ற),
இரசாயனவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

திகதி : 15.10.2024 (செவ்வாய்க்கிழமை)
பி.ப 3.30 மணி

நிகழ்விடம் :
கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


## சாதகமான வளர்ச்சி பதிவானதோடு சவால்களும் தொடர்கின்றன

### உலக வங்கியின் பொருளாதார நிபுணர்

(கொழும்பு)

இலங்கையில் பொதுவாக நோக்குமிடத்து சாதகமான வளர்ச்சி நிலை தெரிகிறது. வங்கியின் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வலுவடைந்துள்ளது. பணவீக்கம் குறைந்திருக்கிறது. வட்டி விகிதங்களும் அதிகரிக்கப்படவில்லை. தனியார் கடன்கள் அதிகரித்திருக்கின்றன. அரச வருமானமும் அதிகரித்திருக்கிறது. ஆனால், மறுபுறம் வறுமை அதிகரிப்பு உள்ளிட்ட சவாலான நிலையும் நீடிக்கிறது என்று உலக வங்கியின் இலங்கை குறித்த பொருளாதார நிபுணர் ஸ்ருதி லக்டகியா தெரிவித்தார்.

இலங்கையின் எதிர்கால வாய்ப்புகள் தொனிப்பொருளில் இலங்கை தொடர்பான புதிய அரையாண்டு அறிக்கை வெளியாகியுள்ளது. இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் உள்ள உலக வங்கியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கையின் பொருளாதார நிலை தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே உலக வங்கியின் இலங்கைக்கான பொருளாதார நிபுணர் ஸ்ருதி லக்டகியா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதில் பல துறைகள் பங்களிப்பு செலுத்துகின்றன. கட்டட நிர்மாணத்துறையில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி அதிகரித்திருக்கிறது. ஆனால் அதற்கு முன்னரான ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இன்னும் வளர்ச்சி தேவைப்படுகிறது. சேவைகள் துறை பங்களிப்பும் அதிகரித்திருக்கிறது. சுற்றுலாத்துறை மற்றும் அந்நிய செலவாணி வருகை என்பன அதிகரித்திருக்கின்றன. இந்த செயற்பாடுகள் காரணமாக நடைமுறை கணக்கு மீதி சாதகமாக பதிவாகி இருக்கின்றது.

அத்துடன் மத்திய வங்கியின் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வலுவடைந்துள்ளது. பணவீக்கம் குறைந்திருக்கிறது. வட்டி விகிதங்களும் அதிகரிக்கப்படவில்லை. தனியார் கடன்கள் அதிகரித்திருக்கின்றன. அரச வருமானமும் அதிகரித்திருக்கிறது. மொத்தமாக பார்க்கும்போது ஒரு முன்னேற்றம் காணப்படுகிறது. இது சாதகமான பக்கமாக இருக்கிறது என்றார். (ம-7)

## மருத்துவர் அர்ச்சுனா வேட்பு மனுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா நேற்று யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட் மனுவை யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள வேட் புமனு ஏற்கும் பகுதியில் தாக்கல் செய்துள்ளார்.

வேட்பு மனுதாக்கலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த அவர் மருந்தேற்றும் ஊசிச் சின்னத்தில் 17 ஆவது சுயேட்சை குழுவாகப் போட்டியிடுவதாகத் தெரிவித்தார்.

மேலும் கட்சியின் கொள்கைகள் தொடர்பில் விரைவில் அறியத்தரப்படும் எனவும் பொறியியலாளர், சட்டத்தரணி உள்ளிட்ட நன்கு கற்றோரே இம்முறை வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)



## மக்கள்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் நிர்வாகி சமந்தா பவருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று இணைய தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்றது.

அதன்படி பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதி மற்றும் சமந்தா பவர் ஆகியோருக்கு இடையில் கருத்துப் பரிமாறப்பட்டதுடன், எதிர்காலத்தில் இலங்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அரசாங்கம் முன்வைத்த கொள்கை அறிக்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் கொள்கைகளுக்கும் இடையிலான ஒற்றுமையை இதன்போது சுட்டிக் காட்டிய சமந்தா பவர், மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் முழு ஆதரவு வழங்கப்படும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்தவும் அதே போன்று சர்வதேச் அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் இந்தச் செயற்பாடுகள் உதவும் எனவும் சமந்தா பவர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார். (ம-7)




ஈழத்தின் முதன்மைச் சித்தர்
அருட்திரு
கடையிற் சுவாமிகளது 133 வது
குரு பூசையும் மகேஸ்வர பூசையும்

காலம் : 15.10.2024, செவ்வாய்க்கிழமை, காலை 8.00மணி
(புரட்டாதி மாதம், பூரட்டாதி நட்சத்திரம்)
இடம் : கடையிற் சுவாமிகள் சமாதிச் சிவாலயம்
45, கடையிற் சுவாமி வீதி, நீராவியடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அடியார்கள் அனைவரும் வருகைதந்து
குருவருள் பெற்றுய்வீர்களாக

கடையிற்சுவாமி அடியார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் 298 குடும்பங்கள் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தகவல்

(கொழும்பு)

**சீரற்ற காலநிலை காரணமாக நாடு முழுவதும் 298 குடும்பங்களைச் சேர்ந்த 1,107 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

கிளிநொச்சி, களுத்துறை, கம்பஹா, மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களே அதிகளவு பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் ஆகும். குறித்த பகுதியில் பதிவான அனர்த்தம் காரணமாக 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் சீரற்ற வானிலையால் நாட்டின் சில பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)



## ஏக்கநாயக்க காலமானார்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் டபிள்யூ.பி. ஏக்கநாயக்க காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இறக்கும் போது அவருக்கு 76 வயதாகும்.

நேற்று முன்தினம் பிற்பகல் அவர் தனது வீட்டின் குளியலறையில் விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் அநுராதபுரம் மாவட்ட முன்னாள் பிரதம அமைப்பாளராகவும் அமைச்சராகவும் செயற்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் அமைச்சர் பதவியையும் வகித்துள்ளார்.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவர் அரசியல் செயற்பாடுகளில் இருந்து விலகி வீட்டில் ஓய்வில் இருந்து வந்துள்ளார். (நி)

## உலக உணவுத்திட்டம்
## இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக வனத் குமாநாயக்க மற்றும் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தனர்.

உலக உணவுத் திட்டத்தின் ஊடாக இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு பிரதிநிதிகள் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

இலங்கையில் உணவு நெருக்கடி நிலைமை தற்போது குறைவாக உள்ள போதிலும், தேவை ஏற்படும் போது புதிய வேலைத்திட்டங்கள் மூலம் இலங்கைக்கு ஆதரவளிக்க உலக உணவுத் திட்டத்தின் தலைவர்கள் ஜனாதிபதியின் செயலாளரிடம் விருப்பம் தெரிவித்தனர். (நி)

## பொலிஸ் சேவையில் மீண்டும் ஷானி



(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை மீண்டும் பொலிஸ் சேவைக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இது நேற்று முன்தினம் முதல் ஒரு வருட காலத்திற்கு அமுலுக்கு வந்துள்ளது.

இலங்கையில் பல சர்ச்சைக்குரிய குற்றங்களுக்குப் பொறுப்பாக இருந்த விசாரணை அதிகாரியாக ஷானி அபேசேகர அறியப்படுகிறார். பிரபல துப்பறியும் நபரான இவர் குற்றப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளராகவும் சேவையாற்றியவர்.

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை, கொழும்பை சுற்றி 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை, பரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை, ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை, ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூடு போன்ற விசாரணைகள் ஷானி அபேசேகரவின் மேற்பார்வையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பொதுத் தேர்தலிலிருந்து விலகிய அரியநேத்திரன்

(அம்பாறை)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட பாக்கியசெல்வம் அரியநேத்திரன் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் பயன்படுத்தி யிருந்த சங்குச் சின்னம் இந்த முறை பொதுத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சீ.வி விக்னேஸ்வரன், முன்னாள் அமைச்சரவை



பேச்சாளர் பந்துல குணவர்தன ஆகியோரும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர். (நி)


## பேருந்துகள் மோதி விபத்து
## 18 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் குறைந்தது 18 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தானது நேற்று காலை 8.15 மணியளவில் கொழும்பு கண்டி பிரதான வீதியின் உதுவன்கந்த வலகடயாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 18 பேர் கேகாலை மற்றும் மாவனெல்ல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கேகாலை பொலிஸார் தெரிவித்தனர். (நி)



## துல்லியமான தகவல்களை வழங்குபவர்களுக்கு சன்மானம்

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

அரச வாகனங்கள் அல்லது சொத்துக்கள் திருட்டு அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் தகவல் தெரிவிக்க புதிய துரித அழைப்பு இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபரினால் இந்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.


அரச வாகனங்கள் அல்லது சொத்துக்கள் திருட்டு அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படுவதை அவதானிக்கும் பொதுமக்கள் 1997 என்ற துரித இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய துல்லியமான தகவல்களை வழங்குபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஒய்வை அறிவித்தார் டென்னிஸ் ஜாம்பவான் ரபேல் நடால்



மலாகாவில் அடுத்த மாதம் நடைபெறும் டேவிஸ் கிண்ண இறுதிப் போட்டிக்குப் பிறகு தொழில்முறை டென்னிஸில் இருந்து ஓய்வு பெறப்போவதாக ரபேல் நடால் உறுதிப்படுத்தியுள்ளார்.

டேவிஸ் கிண்ண இறுதிப் போட்டியில் ஸ்பெயின், நெதர்லாந்தை எதிர்கொள்கிறது. அதுவே மைதானத்தில் நடாலின் இறுதி ஆட்டமாக இருக்குமென நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட காணொளி பதிவு ஒன்றின் மூலம் நடால் தனது முடிவை அறிவித்தார்.

தனது சர்வதேச புகழ்பூத்த டென்னிஸ் வாழ்க்கையில் நடால், 22 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளதுடன்ஒட்டுமொத்தமாக, ரபேல் நடால் தனது 18 ஆண்டு கால டென்னிஸ் வாழ்க்கையில் ஆண்கள் ஒற்றை யர் பிரிவுகளில் 92 பட்டங் களையும் இரட்டையர் பிரிவில் 11 பட்டங்களையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 47 ரன்கள் வித்தியாசத்தில் பாக். வீழ்த்தியது இங்கிலாந்து



பாகிஸ்தானை இன்னிங்ஸ் மற்றும் 47 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வீழ்த்தி பெற்றுள்ளது.


பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி முல்தானில் கடந்த 7ஆம் தேதி திகதி தொடங்கியது இதில் டாஸ் வென்று முதலில் பட்டிங் தேர்வு செய்த பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 149 ஓவரில் 556 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. ஷான் மசூத் 151 ரன், ஆகா சல்மான் 104 ரன், ஷபீக் 102 ரன்கள் எடுத்தனர். அதனை தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து நான்காம் நாளில் 7 விக்கெட்டுக்கு 823 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. ஹாரி புரூக் 317 ரன்னும் ஜோ ரூட் 262 ரன்னும் அடித்து ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து 267 ரன்கள் பின்தங்கிய நிலையில் பாகிஸ்தான் 2ஆவது இன்னிங்சை தொடங் கியது.

முன்னணி வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. இதனால் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன. இதனால் 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் 6 விக்கெட் இழப்பிற்கு 152 ரன்கள் எடுத்திருந்தது.இந்நிலையில் நேற்று கடைசி ஆட்டம் தொடங்கியது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆமீர், சல்மான் ஆகிய இருவரும் அரை சதம் விளாசினர். 63 ரன்கள் எடுத்த நிலையில் சல்மான் அவுட் ஆனார். அடுத்து வந்த வீரர்கள் அப்ரிடி, நசீம் ஷா, என அடுத்தடுத்து வெளியேறினர். அப்ரார் அகமது காயம் காரணமாக வெளியேறினார்.இதனால் பாகிஸ்தான் அணி 220 ரன்களுக்கு ஓல் அவுட் ஆனது. இதனால் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 47 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து முன்னிலை பெற்றுள்ளது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3239

### விக்னேஷ்




### சதுர்த்தீஸ்வரன்

மனைவி: உங்களால ஒரு வேலையும் ஒழுங்கா பண்ண முடியாதா?
கணவன்: இப்ப நான் என்ன தப்பு பண்ணீற்றன்
மனைவி: நேற்று நீங்க தானே சிலிண்டர் மாத்தி விட்டீங்க
கணவன்: ஆமா அதுக்கென்ன
மனைவி: இப்ப பாருங்க சோறு குழைஞ்சிட்டு குழம்பு அடி பிடிச்சிட்டு

### கபிநஜா




### பவித்திரா




### திலக்ஷி




### டஜனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்க[illegible] facebook [illegible]ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கூட்டணி தமிழ்கட்சி

# யாழில் வேட்பு மனுத்தாக்கல்

(சாவகச்சேரி)

யாழ் மாவட்டத்தில் ஜன நாயக தேசியக் கூட்டணி என்ற தமிழ் கட்சியில்- தபால் பெட்டிச் சின்னத்தில் போட்டியிடுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றத் தேர்தல் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-30)


## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 6, வைரவர் கோவில் வீதி, ஆதன இலக்கம் 50 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சின்னக்குட்டி கைம்பெண் பொன்னம்மா என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனத்தை சுப்பையா தம்பையாவும் பெண் நாகம்மாவும் 31.07.1961 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சு.செ. மகாதேவா முகதாவில் 2709ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் நாகலிங்கம் கந்தையா பெண் பாக்கியத்திற்கு சீதனமாக வழங்கியுள்ளனர். குறித்த உறுதியில் தாயுறுதி இலக்கம் குறிப்பிடப்படாது "2ம் பேர்வழிகாரியின் மாதாவழி முதுசொமும் எங்கள் நாற்பது வருடத்திற்கு மேற்பட்ட தங்குதடையற்ற இடையறா ஆட்சியும்...." எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை நாகலிங்கம் கந்தையாவும் பெண் பாக்கியமும் 02.11.1982 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ந.தில்லைவிநாயகம் முகதாவில் 1231ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதியுறுதி மூலம் முத்துராசா சுதாகருக்கு அறுதியாக விற்றுள்ளனர்.

குறித்த ஆதனத்தை முத்துராசா சுதாகர் 17.02.1985 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ந.தில்லைவிநாயகம் முகதாவில் 2105ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதியுறுதி மூலம் நாகலிங்கம் கந்தையா பெண் பாக்கியத்திற்கு அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை நாகலிங்கம் கந்தையாவும் பெண் பாக்கியமும் 17.02.1985 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ந.தில்லைவிநாயகம் முகதாவில் 2106 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் மார்க்கண்டு ராகுலன் பெண் புஸ்பராணிக்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை "கொட்டையடிவளவு" D.286/48 இல் பதிவு செய்யப்பட்ட நிலபர.1 1/2 ஒன்றரையும் வீடும் நிலம் பயிர்வகைகளும், எல்லை
கிழக்கு : வேலாயுதர் பொன்னையாவின் ஆதனம்
வடக்கு : தம்பு பெண் சடையருக்குரிய ஆதனம்
மேற்கு : ஒழுங்கை.
தெற்கு : முருகேசு சரவணமுத்து பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம்.
இதடங்கலும்.

தற்போது மார்க்கண்டு ராகுலன் பெண் புஸ்பராணி இவ்வாதனத்தைத் தனது பெயரிற்கு ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மார்க்கண்டு ராகுலன் பெண் புஸ்பராணி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

(சி-1378)

ஆணையாளர், யாழ்.மாநகரசபை,யாழ்ப்பாணம்.



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 . 04 . 1948

உதிர்வு 12 . 10 . 2022

**அமரர். பாக்கியராசா புனிதவதி**

அன்பின் உறைவிடமாய் எமை அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும் நலமே வாழ
அன்பு மழை பொழிந்து எமை வாழவைத்த தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் உன் நாமம்
எந் நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

56/11, அசாத் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1377)

நினைவுகளுடன்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.


# இராசிபலன்

12.10.2024
புரட்டாதி 26, சனிக்கிழமை,
நவமி காலை 6.13 மணிவரை
தசமி பின்னிரவு 4.39 மணிவரை

திருவோணம் பின்னிரவு-12.57 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம்- 9.02-10.32 மணிவரை

விஜயதசமி,
கேதாரகௌரி
விரதாரம்பம்

**வளவன்**


மேஷம்

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கடகம்

கல்யாணக்கனவுகள் நனவாகலாம், நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.


மகரம்

எடுத்த காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


ரிஷபம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு.


சிம்மம்

தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.


விருச்சிகம்

புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள்.


கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வெளியூர்ப் பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.


மிதுனம்

சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்வு அவசியம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வேலைச்சுமை கூடும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.


கன்னி

நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், மனநிறைவு கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


தனுசு

கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.


மீனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

உலகத்தில் மலிவானது அன்பு, வாங்குபவனுக்கும், கொடுப்பவனுக்கும் இலாபமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடமராட்சியில் இரு விபத்துக்கள் இருவர் காயம்

(கரணவாய்)

வடமராட்சி வதிரிச் சந்திப் பகுதியில் டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆசிரியர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை வதிரிச் சந்திப்பகுதியில் இடம் பெற்றது. குறித்த ஆசிரியர் மோட்டார் சைக்கிளில் பாடசாலை சென்று கொண்டிருந்தபோது வதிரிச் சந்தி ஊடாக மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்துடன் விபத்து ஏற்பட்டது. சிறியரக வாகனத்தில் உடனடியாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக கிசிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். குறித்த விபத்தில் அல்வாய் மனோகராப் பகுதியைச் சேர்ந்த முரசு மோட்டை முருகானந்தாக் கல்லூரியில் கற்பிக்கும் அஜந்தீபன் என்பவரே படுகாயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பாக் டிப்பர் சாலரதியினைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை உடுப்பிட்டிப் பகுதியில் மற்றும் ஒரு விபத்து ஏற்பட்டுள்ளது. மகளை பாடசாலைக்கு இறக்கிவிட்டு வீடு திரும்பிய வேளை ஆட்டோ ஒன்றுடன் விபத்து ஏற்பட்டதில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ( நி-60)



யாழ்.வண்ணை ஸ்ரீ வெங்கடேசஷ்வர வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)


## ஏடு தொடக்கல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவ குரு ஆதீனத்தில் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆதீன முதல்வர் வேலவன் சுவாமிகளால் ஏடு தொடக்கல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

எனவே பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புவோர் 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவுகளை மேற்கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

# டெங்கு நோயிலிருந்து பாதுகாப்போம்



இலங்கையில் மிக விரைவாக அதிகளவில் பரவுகின்ற தொற்றுநோயாக டெங்கு நோய் விளங்குகின்றது. யாழ் மாவட்டத்திலும் டெங்கு நோயின் தீவிர நிலை காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டு 4870 நோயாளர்களும் ஆறு மரணங்களும் ஏற்பட்டுள்ளது. இந்த வருடம் (2024) 5261 நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன் ஒரு மரணமும் ஏற்பட்டுள்ளது. பருவகால மழை ஆரம்பித்த நிலையில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. நோயாளர் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதைக் காணமுடிகின்றது.

டெங்குக் காய்ச்சல் நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோயாகும். வைரஸ் தொற்றுக்குள்ளான பலர் எந்த வித நோய் அறிகுறிகளையும் வெளிப்படுத்தமாட்டார்கள். ஒரு சிலருக்கு டெங்குக் காய்ச்சலாகவோ, டெங்கு இரத்தக் கசிவுக் காய்ச்சலாகவோ, டெங்கு அதிர்ச்சி நிலையாகவோ மாற லாம்.

நான்கு டெங்கு வைரஸ் கிருமிகள் காணப்படுவதனால் ஒருவருக்கு அவருடைய வாழ்நாளில் ஒரு தடவைக்கு மேல் டெங்கு நோய் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. டெங்கு நோயின் தாக்கம் பரந்துபட்டதாகும். ஒரு நபர் இரண்டாவது தடவையாக டெங்குக் காய்ச்சலுக்குள்ளாகும் போது டெங்கு குருதிப் பெருக்குக் காய்ச்சலின் கடுமையான தாக்கங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகமாகும். எனவே ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனையைப் பெறுவதும் இரத்தப் பரிசோதனை செய்தலும் நோய்க்காலம் முழுவதும் கவனிப்பு மேற்கொள்ளப்படுமானால் பெரும்பாலான உயிரிழப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

ஒருவருக்கு டெங்கு வைரஸினால் ஏற்பட்ட காய்ச்சல் எனில் அதனைக் கவனிக்காமல் இருக்கும் பட்சத்தில் உடம்பிலுள்ள குருதித் திரவங்கள் வெளியேறி அவர் அபாய நிலைக்கு இட்டுச் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

### டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகளாவன

கடுமையான தலையிடி, தசை வலி, மூட்டு வலி, உடம்பு வலி, உடலில் சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றுதல், கண்ணுக்கு பின்புறத்தில் ஏற்படும் வலி, குமட்டல், வாந்தி.


### டெங்கு அபாய நிலைக்கான அறிகுறிகளாவன:

வயிற்று வலி, பசியின்மை, மூச்சு விடுதலில் சிரமம், தொடர்ச்சியான வாந்தி, வயிறு வீக்கமாகக் காணப்படல், முரசிலிருந்து குருதி வெளியேறல், தீவிர உடல் இளைப்பு, சோம்பல் தன்மை, சிறுநீரின் அளவு குறைவடைதல், அதிகளவு வியர்த்தல், பதற்றம், ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் சிறுநீர் வெளியேறாது இருத்தல், கை, கால் குளிர்தல், குருதி கலந்த மலம், வாந்தி போன்றன இதனால் ஆரம்பத்திலேயே தகுந்த வைத்திய ஆலோசனை பெறுவதன் மூலம் மரணத்தில் இருந்து பாதுகாப்புப் பெறலாம்.

டெங்கு காய்ச்சல் ஒரு சடுதியான காய்ச்சல் நிலையாகும். ஆனால் டெங்கு குருதிப் பெருக்கு காய்ச்சலானது டெங்கு நோயின் அதி தீவீரமான நிலையாகும். ஆரம்ப நிலையில் டெங்கு காய்ச்சலும் டெங்கு குருதிப்பெருக்கு காய்ச்சலும் வேறு பிரித்தறிய முடியாதவாறு ஒரே மாதிரியான அறிகுறிகளைக் கொண்டிருந்தாலும் இவற்றிற்கு இடையிலான வித்தியாசமானது டெங்கு குருதிப் பெருக்கு காய்ச்சலில் காய்ச்சல் குறைவடைகின்ற மூன்றாவது நாளில் இரத்தக் குழாய்களில் இருந்து பிளாஸ்மா ஆனது நுரையீரலைச் சுற்றியும் வயிற்றுப் பகுதியில் கசிந்தும் காணப்படும். இவ்வாறு தொடர்ச்சியான பிளாஸ்மா கசிகின்ற பொழுது அதிர்ச்சி ஏற்பட்டு மரணமும் சம்பவிக்கலாம். ஆகவே நோயாளர்கள் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட வேண்டும். அதிர்ச்சி நிலையில் ஈரல், சிறுநீரகம் ,இதயம் என்பன செயலிழந்ததும் மரணம் ஏற்படலாம்.

**இவ்வாறான ஆட்கொல்லி டெங்கு வைரஸைப் பரப்பும் நுளம்பினை முறையான சுற்றுச் சூழல் முகாமைத்துவத்தைப் பின்பற்றுவதன் மூலம் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம்.**

முறையான சுற்றுச் சூழல் முகாமைத்துவம் என்பது நுளம்புக் குடம்பிகள் பெருகுகின்ற இடங்களான தேவையற்ற வெற்றுப்பாத்திரங்கள், எறியப்பட்ட பிளாஸ்ரிக் பீங்கான்கள் மற்றும் தகரப் பாத்திரங்கள், கூரைப் பீலிகள், நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்கள் போன்றவற்றை அகற்றுவதன் மூலம் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தைக் குறைத்து மனிதனுக்கும் நுளம்பிற்கும் இடையிலான இடைத்தொடர்பைக் குறைக்கக் கூடியதாகச் சூழலை மாற்றியமைப்பதாகும். இந் நடவடிக்கையே டெங்கு நோயைத் தவிர்த்துக் கொள்வதற்கான நுளம்புக் கட்டுப்பாட்டின் பிரதான படியாக விளங்குகின்றது.




**எமது சுற்றாடலில் பொதுவாக நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு நீர் தேங்காதவாறு பாதுகாத்தல்.**

1. பிளாஸ்ரிக் பொருட்கள், பீங்கான் மற்றும் தகரப்பாத்திரங்கள் போன்றவற்றைச் சரியான முறையில் சூழலிலிருந்து அப்புறப்படுத்தல்.

2. நீர் சேகரிக்கும் தொட்டிகள், பூச்சாடிகள், குளிரூட்டிகளின் அடித்தட்டுக்கள், எறும்புப் பொறிகள் போன்றவற்றை நன்கு தேய்த்துக் கழுவுங்கள்.

3. சீமெந்து பூசிய வடிகான்கள் சீமெந்துத் தரையில் சேரும் நீர் கொங் கிறீட் கூரைகளை உரிய முறையில் நீரை வழிந்தோடச் செய்தலும் கூரைப்பீலிகளைக் கிரமமாகச் சுத்தம் செய்தலும்.

4. பாவித்தபின் வீசப்படும் பாத்திரங்களைக் குறைத்தல் மீள்பாவனை, மீள் சுழற்சி மூலமாக உரிய முறையில் திண்மக் கழிவுகளை அகற்றுதல்.

5. பாவித்த ரயர்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் தோட்டத்தில் பாவிக்கும் பாத்திரங்களை நீர் தேங்காதவாறு முறையாகக் களஞ்சியப்படுத்தல்.

6. இரும்பு மற்றும் உலோகப் பொருட்களிலுள்ள குழிகளுக்கு சீமெந்து எண்ணெய் இடுவதன் மூலம் அடைத்தல் அல்லது நிரப்புதல்.

7. மூங்கில் மரங்களைக் கணுக்களில் வெட்டுதல் அல்லது மூங்கில் குழல்கள் மற்றும் மரப்பொந்துகளுக்கு மண் அல்லது சீமெந்து இட்டு நிரப்புதல்.

8. மரப்பொந்துகளில் மண்ணை நிரப்புதல் அல்லது அதனை இல்லாது செய்தல்

9. கரடுமுரடான சீமெந்து நிலங்களில் நீர் தேங்கி நிற்காதவாறு பராமரித்தல்

10. வீட்டின் மேற்புறம், வீட்டின் உட்புறம், வெளிச் சுற்றாடல் போன்றவற்றை தொடர்ச்சியாக அவதானித்து நீர் தேங்கியிருப்பின் அதனை உடனடியாக அகற்றி நீர் சேகரிக்கும் பாத்திரங்களை மூடி வைத்தல்.

11. கிணறுகள் மற்றும் சிறு நீர்த்தேக்க அழகு தடாகங்களில் மீன்களை வளர்த்தல்.

போன்ற பல்வேறு வகையான நீர்தேங்கக்கூடிய இடங்களை இனங்கண்டு அதனை சுத்தம் செய்வதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம். எல்லோருமாக இணைந்து சுற்றாடலை சுத்தமாகப் பேணுவதனால் கொடிய டெங்கு காய்ச்சலில் இருந்து எமது மக்களைப் பாதுகாப்போம். எமது கரங்களில் எமது சுற்றாடல்.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் இடைக்கால கொடுப்பனவாக 3000 ரூபா

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

அனைத்து ஓய்வூதிய தாரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக 3000 ரூபாவை அடுத்த வாரம் முதல் வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இடைக்கால கொடுப்பனவான 3000 ரூபா ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்படாமை தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி, அதே தொகையை அடுத்த வாரத்திற்குள் ஓய்வூதியதாரர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் நிதியமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2024 ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் இடைக்கால கொடுப்பனவான ரூ.3000 கிடைக்காததால் ஓய்வூதியம் பெறுவோர் எதிர்கொள்ளும் சிரமங்களையும் அவர்களின் கோரிக்கையையும் கருத்தில் கொண்டு, அரசின் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் இம்மாதம் முதல் இந்தத் தொகையை வழங்க இதன்போது ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

ஒக்டோபர் மாதத்துக்கான ஓய்வூதியம் ஏற்கனவே ஓய்வூதியர்களின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதால் ஒக்டோபர் மாதத்துக்கான ரூ.3000 கொடுப்பனவை அடுத்த வாரத்திற்குள் அவர்களது கணக்கில் வைப்பிலிடுமாறும் 3000 ரூபா கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (நி)




# காதர் மஸ்தான் வேட்பு மனுத்தாக்கல்



(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவினை முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தாக்கல் செய்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இலங்கை தொழிலாளர் கட்சியின் கங்காரு சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் நேற்றுக்காலை வேட்பு மனுவினைத்தாக்கல்செய்திருந்தார். (நி-250)

## Invitation for Bids (IFB)

### *VAVUNIYA NORTH PRADESHIYA SABHA - NEDUNKERNY*

[1].The Chairman Local Authority Procurement Committee (LAPC), on behalf of Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs. Mn) | ICTAD Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | COU/VU/VNPS/ W/08-2024 | Construction of Shopping Complex at Puliyankulam | 10.65 | C6/C5 Building | 110,000.00 | 10.02.2025 | 84.0 Days |
| 02 | COU/VU/VNPS/ W/09-2024 | Construction of Kulavisuddan School Road | 2.97 | C8/C7 Highway | 30,000.00 | 10.02.2025 | 84.0 Days |

[2].Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure. Since the total cost estimate of this procurement is below Rs.50Mn, Regional preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(ii)

[3].To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA registration in **Building/Highway Construction** for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

[4].Interested bidders may obtain further information from **Secretary, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny** [Telephone No: 024 205 3014, Fax No: 024 205 3084, Email: vnpsnk@gmail.com] and inspect the bidding documents at the address **Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny from 09.00 Hrs to 15.00 Hrs** on working days.

[5].A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny** from **14.10.2024 until 27.10.2024 from 09.00 Hrs to 15.00 Hrs** on working days Upon payment of a non-refundable fee of **Three Thousand Rupees *(Rs.3,000.00)*** **The method of payment will be by cash.**

[6].Bids shall be delivered in duplicate to the address at **Secretary, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny on or before 28.10.2024 and 10.30 Hrs**. Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

[7].Bid shall be valid up to **13.01.2025.**

[8].All bids shall be accompanied by a *"Bid-Security,* as mention in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above.

[9].The pre-bid meeting will be held on **21.10.2024** at **10.30 Hrs** at the **Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny**

The address (es) referred to above is (are):

**Chairman,**
**Local Authority Procurement Committee, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny.**

(C-1376)

லங்கா மஹறால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (364)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெறுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

பணிப்பெண் தேவை
இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (சி-1377)
077 436 6423

# விஜயதசமி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபையும் யாழ். பல்கலைக் கழக இந்து மன்றமும் இணைந்து நடத்தும் விஜயதசமி திருநாள் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் ஏடு தொடக்கல் நிகழ்வும் முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டாடா அறக்கட்டளைத் தலைவராக நோயல் டாடா நியமனம்



(டில்லி)
ரத்தன் டாடா மறைவையொட்டி டாடா அறக்கட்டளைத் தலைவராக நோயல் டாடா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பிரபல தொழிலதிபரும் டாடா குழுமத்தின் முன்னாள் தலைவருமான ரத்தன் டாடா, உடல்நலக் குறைவால் கடந்த 9 ஆம் திகதி இரவு காலமானார்.

தற்போது அவரது மறைவிற்குப் பிறகு டாடா குழுமத்தை நிர்வகிக்கப் போவது யார் என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில் நேற்று டாடா அறக்கட்டளையின் புதிய தலைவராக, நோயல் டாடா நியமனம் செய்யப்பட்டுள்ளார். நோயல் டாடா, ரத்தன் டாடாவின் சகோதரர்.

நோயல் டாடாவுக்கு வயது 67. இவர் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேல் டாடா குழுமத்தில் பல்வேறு துறையில் பணியாற்றி உள்ளார். டாடா குழுமத்தின் பல நிறுவனங்களில் இயக்குநராகவும் இருந்துள்ளார்.

மறைந்த ரத்தன் டாடாவின் தந்தை நேவல் டாடா. அவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்கு ரத்தன் டாடா மற்றும் ஜிம்மி டாடா என 2 மகன்கள். முதல் மனைவியை 1940 களில் விவாகரத்து செய்த நேவல் டாடா, இரண்டாம் திருமணம் செய்து கொண்டார்.

அந்த இரண்டாம் மனைவியின் மகன் தான், தற்போது டாடா அறக்கட்டளைத் தலைவராக பொறுப்பேற்றுள்ள நோயல் டாடா ஆவார். (நி)

## இஸ்ரேலின் தாக்குதலில் 22 பேர் உயிரிழப்பு

(ஜெருசலேம்)
மத்திய பெய்ரூட்டில் இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்துள்ளனர் என லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், 117 பேர் காயம் அடைந்துள்ளனர். தாக்குதல்களில் ஒன்று ராஸ் அல்-நபா பகுதியில் உள்ள அடுக்குமாடி கட்டடத்தின் கீழ் பாதியை தாக்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



இரண்டாவது தாக்குதலில், புர்ஜ் அபி ஹைதர் பகுதியில் ஒரு முழு கட்டடமும் இடிந்து தீயில் மூழ்கியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (நி)

## புளோரிடாவை புரட்டிய 'மில்டன்' சூறாவளி

### உயிரிழப்பு அதிகரிப்பு



(வோஷிங்டன்)
புளோரிடாவைத் தாக்கிய மில்டன் சூறாவளியால் அங்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 4,300 இற்கும் மேற் பட்டோர் இதுவரை மீட்கப்பட்டுள்ள நிலையில் பலர் காணாமல் போயுள்ளனர்.

இதனால் இறப்பு எண்ணிக்கை உயரகூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

புயல் தாக்கத்தால் புதன் மற்றும் வியாழன் அன்று பல மணிநேரம் மின்சாரம் இல்லாமல் சுமார் மூன்று மில்லியனுக்கும் அதிகமான வீடுகள் மற்றும் வணிக நிலையங்கள் இருளில் மூழ்கியிருந்தன.

மில்டன் சூறாவளி ஆரம்பத்தில் 5 ஆம் வகை புயல் என்று கணிக்கப்பட்டதால் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வெளி யேற்றப்பட்டனர்.

எனினும் அது வலு விழந்து மேற்கு புளோ ரிடாவை ஒரு 3 ஆம் வகை புயலாகத் தாக்கியது.

மாநிலம் முழுவதும் மின்சாரத்தை மீட்டெடுக்க கனடாவில் இருந்து புளோ ரிடா வரை நாடு முழுவதும் இலட்சக்கணக்கான மின் இணைப்பு ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

வெள்ளத்தில் முதலைகள் மற்றும் பாம்புகளின் அச்சுறுத்தல் காணப்படுவதால் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (நி)



## ஒட்டுண்ணியால் பரவும் கொங்கோ வைரஸ்

### ராஜஸ்தானில் பெண் உயிரிழப்பு

(ஜோத்பூர்)
விலங்குகளின் உடம்பில் இருக்கும் ஒட்டுண்ணி மனிதர்களைக் கடிப்பதால் பரவும் கொங்கோ வைரஸினால் ராஜஸ்தானில் 51 வயது பெண் உயிரிழந்துள்ளார்.

ஆடு, மாடு, நாய், பூனை போன்றவற்றின் மீது இருக்கும் ஒட்டுண்ணி, தொற்றுநோய் உள்ள அந்த விலங்கைக் கடித்து விட்டு, மனிதர்களை கடிப்பதால் கொங்கோ வைரஸ் பரவுகிறது.

கால்நடை வளர்ப்போர், இறைச்சி கடைகளில் பணியாற்றுவோர், கால்நடை மருத்துவர் ஆகியோருக்கு இந்த நோய் பரவும் ஆபத்து அதிகம்.

இந்த வைரஸ் பாதிப்பு 1956 இல் ஆபிரிக்க நாடான கொங்கொவில் முதலில் கண்டுபிடிக்கப் பட்டதால், இதற்கு கொங்கோ வைரஸ் என்று பெயரிட்டுள்ளனர்.

இந்நிலையில், ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரைச் சேர்ந்த 51 வயது பெண் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார். அவரது ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு புனேவில் உள்ள தேசிய வைரலாஜி நிறுவனத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. அதில் அவருக்கு கொங்கோ வைரஸ் இருப்பது உறுதியானது.

இந்த நோய் பாதித்தால் ஆரம்பத்தில் வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்று வலி ஏற்படும். பின் காய்ச்சல், தசை வலி, தலைச்சுற்றல், கழுத்து வலி, உடல் சோர்வு காணப்படும். உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்காமல் விட்டால் உடல் உள்ளுறுப்புகளில் இரத்தக் கசிவு ஏற்பட்டு உயிரிழக்க நேரிடும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியான்-இந்தியா உச்சி மாநாடு

# சீனாவுக்கு நெருக்கடி

(லாவோஸ்)

**கடல் சார்ந்த மோதல்களின் போது ஐக்கிய நாட்டு சட்டத்தை நிலைநிறுத்துவது அவசியம் என ஆசியான் தலைவர்கள் உச்சி மாநாட்டில் வலியுறுத்தியுள்ளனர்.**




தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான "ஆசியான்" அமைப்பில் புருனே, கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேஷியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய 10 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த கூட்டமைப்புக்கு நடப்பாண்டில் லாவோஸ் நாடு தலைமை வகிக்கிறது. இந்நிலையில், ஆசியான் - இந்தியா இடையிலான 21 ஆவது உச்சிமாநாடு மற்றும் 19ஆவது கிழக்கு ஆசிய உச்சி மாநாடு ஆகியவை லாவோசின் வியன்டியன் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. இம் மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

மாநாட்டில் தென்சீன கடற்பகுதியில் சமீபத்தில் பிலிப்பைன்ஸ்- சீன கப்பல்களுக்கு இடையே நடந்த மோதல்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. கடல் சார்ந்த சண்டையின் போது, ஐக்கிய நாட்டு சட்டத்தை நிலைநாட்டுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

இதை அடிப்படையாகக் கொண்டு கடல் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு சீனாவுக்கு ஆசியான் தலைவர்கள் அழுத்தம் கொடுத்தனர். இதற்கு பதிலளித்துள்ள சீனா, பிராந்திய விவகாரங்களில் வெளிநாட்டு தலைவர்கள் தலையிட வேண்டாம் என வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து சீன பிரதமர் லீ கியாங் கூறுகையில், "நம் வளர்ச்சிக்கு சில நிலையற்ற காரணிகள் தடையாக உள்ளன. குறிப்பாக வெளிப்புற சக்திகள் நம் விவகாரங்களில் அடிக்கடி தலையிடுகின்றன.

ஆசியாவில் பூகோள மோதல்கள் மற்றும் புவிசார் அரசியல் மோதல்களை அறிமுகப்படுத்த அந்த சக்திகள் முயற்சிக்கின்றன. அதைத் தடுக்க வேண்டும். சர்ச்சைகள் சுமூகமாகத் தீர்க்கப்படுவதை உறுதிசெய்ய நாடுகளுக்கு இடையே மேலும் பேச்சு நடத்தப்பட வேண்டும்," எனத் தெரிவித்தார். (நி)

## இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 2100 பேர் பலி

(ஜெருசலேம்)

கடந்த ஆண்டு காசாவில் ஹமாசுக்கு எதிராக தாக்குதலை தொடங்கிய அடுத்த நாள் முதலே லெபனானில் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான தாக்குதலையும் இஸ்ரேல் தொடங்கி விட்டது.

லெபனான் மீது இதுவரை 9,470 முறை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த ஓராண்டில் இதுவரை 2,141 பேர் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக லெபனான் அமைச்சர் நசீர் யாசின் தெரிவித்துள்ளார். தாக்குதலால் வீடுகளை இழந்தவர்களுக்காக ஆயிரம் முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. தற்போது ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் முகாம்களில் தங்கியுள்ளனர்.

ஹிஸ்புல்லா நிலைகளின் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகிறது.

பதிலுக்கு தெற்கு லெபனான் பகுதியில் முன்னேறிவரும் இஸ்ரேல் இராணுவத்தை தாக்கி வருவதாக ஹிஸ்புல்லா கூறியுள்ளது. அதே போல வடக்கு இஸ்ரேலினும் தாக்குதலை நடத்தியதாக ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளது.

## இலக்கியத்திற்கான நோபல் பரிசு வென்றார் ஹான் காங்



(ஸ்டார்ஹோம்)

இலக்கியத்துக்கான நோபல் பரிசு தென் கொரியாவைச் சேர்ந்த ஹான் காங்கிற்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. 2024 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான துறைகளில் சர்வதேச சமூகத்திற்கு சிறப்பான பங்களிப்பு செய்த சாதனையாளர்களுக்கான நோபல் பரிசு ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி 2024 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில தினங்களாக ஒவ்வொரு பிரிவிலும் நோபல் பரிசு வென்றவர்கள் யார்யார் என்ற அறிவிப்புத் தொடர்ச்சியாக வெளியாகி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிப்பட்ட தேவைக்காக ஜனாதிபதி மாளிகையை

# தொடர்ந்து தவிர்க்க தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிர தமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர் ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையை தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்து வதைத் தவிர்க்க தீர்மா னித்துள்ளனர்.

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றதும் அவர் எங்கு தங்கியுள்ளார் என தேடப்பட்டு வருகின்றது.

இதன்போது அவர் ஜனா திபதி மாளிகையை பயன் படுத்தவில்லை எனத் தெரி வந்துள்ளது.

தொடர்ந்து தனது தனிப் பட்ட தேவைக்கு ஜனாதிபதி மாளிகையைப் பயன்படுத் தப் போவதில்லை எனவும் ஜனாதிபதி செயலக விட யங்கள் மற்றும் பணி விட யங்களுக்கு மட்டுமே அதனைப் பயன்படுத்தவும் ஜனாதிபதி தீர் மானித்துள் ளார் என கூறப்படுகின்றது.

இதேவேளை பிரத மரும் அலரி மாளிகையைப் பயன்படுத்தாமல் தனது வீட் டிலேயே தங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது.

அரச சொத்துக்களை வீண் விரயம் செய்வதை தவிர்த்து பணத்தை சேமிக் கவுள்ளதாக தேர்தல் பிரசா ரங்களின் போது ஜனா திபதி அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.· (நி)

# தொழில் விசாவாக

## விசிட் விசாவை மாற்ற முடியாது

(கொழும்பு)

மலேசியாவிற்கு வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வது தொடர்பில் இலங்கை பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் நாட்டு மக்க ளுக்கு குறுஞ்செய்தி ஒன்றை யும் பாதுகாப்பு அமைச்சின் சட்டவிரோத ஆட்கடத்தல் தடுப்புப்பிரிவு அனுப்பிவைத் துள்ளது.

விசிட் விசா மூலம் மலே சியா சென்று அந்த விசாவை தொழில் விசாவாக மாற்றிக் கொள்ள வாய்ப்பு கிடையாது. மோசடிகாரர்கள், மனித கடத் தல்களில் ஈடுபட்டு வருவதா கவும் இந்த சட்டவிரோத சதி வலையில் சிக்க வேண்டாம் எனவும் பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள எச்ச ரிக்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுக்கொள்வதற் காக இவ்வாறு விசிட் விசாவில் செல்வோர் சிக்கல்களை எதிர் நோக்க நேரிடும் என சுட்டிக் காட்டியுள்ளது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 160 | 80-100 | 120 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 200 | 250-300 | 400 |
| தக்காளி | 300 | 250 | 400 | 230 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 150-200 | 200 |
| கோவா | 250 | 300 | 200 | 230 | 250 |
| கரட் | 200 | 200 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 120 | 100 | 150 | 250 |
| வாழைக்காய் | 160 | 140 | 200 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 200-350 | 300 |
| பெரிய வெங்காயம் | 300 | 300 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 500 | 400 | 450 | 500-600 | 450 |
| வெண்டக்காய் | 160 | 200 | 100 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 200 | 150 | 250 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 350-400 | 400 |
| லீக்ஸ் | 200 | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 500 | 500 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 300 | 150-200 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 450 | 320 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 180 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 450 | 350-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 130 | 80-150 | 100-150 |
| இராசவள்ளி | -- | 1000 | 1500 | 550 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 450 | -- | 450 |
| முள்ளங்கி | 80 | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 120 | 80 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 160 |

## இன்று ஒரு தகவல் 239



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புயல்

அந்த மரத்திற்கு அடியிலே சிறிது நேரம் உட்கார்ந்து இருந்தேன். காற்று சுகமாக வீசியது. ஆனந்தமாக இருந்தது என்று சொல்லுவது உண்டு.

காற்று மெதுவாக வீசினால் அது சுகமாகத்தான் இருக்கும். அதுவே புயலாக வீசியது என்றால் அது சுகமாகவா இருக்கும்.

கடற்கரைக்குப் போவதுகூட எதற்காக? காற்று வாங்குவதற்காகத்தான். புயல் வாங்கு வதற்காகவா இல்லை!

புயல் வாங்குவதற்கு கடற்கரைக்குப் போகிறேன் என்று சொன்னால் இவர் புயலை வாங்க முடியாது! புயல் இவரை வாங்கிக்கொண்டு போய்விடும்.

தூக்கிக் கொண்டு போய் கடலிலே போட்டுவிடும். பின்பு தட்டுத்தடுமாறி நீச்சலடித்து கரைக்கு வந்து சேரவேண்டும். காற்று வாங்க போனவர் மூச்சு வாங்க வீட்டுக்கு வந்து சேருவது போல ஆகிவிடும்.

உயிர் வாழ்வதற்கு காற்று மிகவும் அவசியம்தான். அது மெதுவாக இருந்தால் தென்றல் தவழ்கிறது என்போம்! சுமராக இருந்தால் வீசுகிறது என்போம்! புயலாக இருந்தால் சீறுகிறது என்கின்றோம்! வித்தியாசம் என்பது இங்கே வேகத்தை பொறுத்தது.

புயல் "நான் இத்தனை மணிக்கு இந்த இடத்திற்கு வரப்போகின்றேன்! எல்லோரும் ஜாக்கிரதையாக இருங்கள்" என்று சொல்லிவிட்டு வருவதில்லை.

இருந்தாலும் அது வருவதைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து வைத்துக்கொள்ள மனிதன் முயற்சி செய்ய வேண்டும். இருந்தாலும் இந்த முயற்சியிலே முழு வெற்றி கிடைத்து விட்டதாகச் சொல்ல முடியாது.

ஆனாலும் சில அறிகுறிகளை வைத்து ஓரளவுக்கு அதைக் கண்டுபிடிக்க முடியும். சில சாதனங்கள் இருக்கிறது அவையெல்லாம் கூட புயல் வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அதைக்கண்டுபிடித்துச் சொல்ல முடிகிறது. வேறு சில அறிகுறிகளை வைத்து ஓரளவுக்கு யூகித்துக் கொள்ளலாம்.

கடல் பகுதியிலே வேகமான காற்று உருவாகும். அது காரணமாக உண்டாகின்ற கடல் அலைகள் நான்கு திசைகளிலேயும் சஞ்சரிக்கின்ற சாதாரணமான காற்று அடிக்காத பகுதிகளில் கூட கடுமையான அலைகள் உண்டாகும்.

இதை வந்து ஸ்வெல் (Sweel) என்று சொல்லுகிறார்கள். சாதாரண நாட்களிலே கடலின் உட்பகுதியில் காணப்படுகின்ற இந்த "ஸ்வெல்" பரவி படர்ந்து கடற்கரையோரத்திலேயும் தென்பட ஆரம்பித்தது என்றால் அங்கே புயலை எதிர்பார்க்கலாம்.

அதன் பின்பு மேகங்கள் இருக்கிறதே அதில் பலவகையுண்டு. அதில் சைரஸ் என்பது தான் நார்கள் மாதிரி அமைந்து இருக்கின்ற மேகங்கள். இது வானத்திலே தெரிந்தாலும் அது புயலுக்கு ஒரு அறிகுறி தான்!

புயல் மையம் இருக்கிறது அல்லவா அதற்கு செங்குத்தான உயரத்திலே இந்த மேகங்கள் தென்படும்! புயல் தீவிரமாகும் போது சைரஸ் மேகம் வானத்தை முடிக் கொள்ளும். ஆதவன் உதயமாகின்ற நேரம் மறையும் நேரம் இந்த சமயங்களிலே வானம் பிரகாசமான சிவப்பு நிறத்திலே இருக்கும்.

புயல் காற்று நூறாவது மைலிலே வீசுகின்ற போது நாம் இருக்கின்ற இடத்தில் காற்றின் திசையிலே மாற்றம் ஏற்படுகின்றது. காற்றழுத்தம் தீடீரென்று கூடும், குறையும். அடுத்தடுத்து காற்றழுத்தம் குறைந்து கொண்டே சென்றால் புயல் எங்களைத் தேடி வந்துகொண்டு இருக்கிறது என்று அர்த்தம்!

சாதாரணமாக வீசிக்கொண்டு இருக்கின்ற காற்றினுடைய திசை அடிக்கடி மாறும். வேகமும் அதிகரிக்கும். புயல் வருவதற்கு முன்பு உள்ள சூழ்நிலை புழுக்கமாகவும் வறண்டும் இருக்கும்.

சலனமில்லாத சூனியமாக இருந்தால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டியது தான். புயலுக்குப் பின் அமைதி என்கின்றோம் அல்லவா அது மாதிரி அமைதிக்குப் பின் புயல்.

மைக்ரோ- சீஸ்மோ கிராஃப் என்று ஒரு நூதனமான கருவி. கடலில் புயற்காற்றை உண்டாக்குகின்ற சிறிய சலனம் கூட இதில் பதிவாகிவிடும். செயற்கைக் கோள்கள் எல்லாம் இப்போது இதற்கு மிகவும் உயோகம்.

ஒரு வேவு விமானம் பறந்து சென்று சில்வர் அயோடைட்டு குண்டுகளை பொழிந்ததாம். இதனால் காற்றின் சக்தியை 31 சதவீத அளவிற்கு குறைக்க முடிந்ததாம்.என்ன தான் சொல்லுங்க இயற்கையை வெல்வது கடினம் என்று தான் தோன்றுகிறது. உலகத்தை அழிக்கக் கூடிய அணுகுண்டை மனிதரால் தயார் செய்ய முடிகிறது. ஆனால் அழிக்க வரும் புயலைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே.

"புயல் வேகம் பொன்னம்பலம்" என்று ஒருவர் இருந்தார். அவர் பேசினாலே இடி இடிக்கிறது மாதிரி இருக்குமாம். அவர் பேச்சை கேட்பவர்கள் எல்லாம் நடுநடுங்கிப் போய்விடுவார்கள்.

அவர் வீட்டிலே சம்சாரத்தைக் கூப்பிட்டு இதோ பாருப்பா புயல் வேகப் பிரசாரத்திற்கு புறப்பட்டுப் போறேன். திரும்பிவர ஒரு வாரத்திற்கு மேலே ஆகும். என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு போனார். ஆனால் புறப்பட்டுப் போன 15 நிமிடத்திலே திரும்பி வந்து விட்டார். அதே வேகத்திலே "என்ன விடயம் என்று கேட்டார் அந்த அம்மா?" "நிஜமாகவே புயல் வரப்போகின்றதாம் அது தான் பேச்சை கான்சல் செய்து விட்டு திரும்பி வந்து விட்டேன்!" என்றார் இவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா பொறிமுறையை எதிர்த்தமை ஏமாற்றமளிக்கிறது

## சர்வதேச மன்னிப்புச் சபை

**(கொழும்பு)**

**இலங்கையின் புதிய அரசாங்கம் கடந்த கால கொள்கைகளை தொடர்வதற்கும் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை எதிர்ப்பதற்கும் தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி பிராந்திய இயக்குநர் பாபு ராம் பண்ட் தெரிவித்துள்ளார்**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளமை இலங்கையில் காணப்படும் மனித உரிமைகள் கரிசனை குறித்து சர்வதேச சமூகம் தொடர்ந்தும் கவனம் செலுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

புதிய தீர்மானத்தின் மூலம் ஆணை நீடிக்கப்பட்டமை பொறுப்புக்கூறலிற்கு ஆதரவளிப்பதை நோக்கிய வரவேற்கத்தக்க விடயம் எனினும் இந்தத் தீர்மானம் மேலும் ஒரு வருடகாலத்திற்கு மாத்திரம் நீடிக்கப்பட்டுள்ளமை ஏமாற்றமளிக்கின்றது.

சிவில் சமூகத்தினரும் சர்வதேச அமைப்புகளும் ஆணையை இரண்டு வருடங்களிற்கு நீடிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

சமீபத்தில் ஜனாதிபதித்தேர்தல் இடம்பெற்ற அடுத்த மாதம் பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நாடு என்ற வகையில், அரசியல் மாற்றத்தை எதிர்கொண்டுள்ள நாடு என்ற வகையில் இலங்கை கடந்த காலங்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் சிறந்த ஈடுபாட்டை பேணுவது அவசியம்.

இதன் காரணமாக இலங்கையின் புதிய அரசாங்கம் கடந்த கால கொள்கைகளை தொடர்வதற்கும் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை எதிர்ப்பதற்கும் தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது.

பாரதுாரமான மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புகூறுவதற்கு கிடைத்துள்ள வளங்களை பயன்படுத்த அரசாங்கம் தயாராகவுள்ளதா என்ற சந்தேகத்தை இது எழுப்பியுள்ளது.

ஆழமாக வேரூன்றியுள்ள தண்டனையின்மை தொடரும் ஆபத்தும் உள்ளது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் சர்வதேச சமூகம் நீதி, உண்மை இழப்பீட்டு விவகாரங்களில் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை அடைவதற்காக சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை பேண வேண்டும்.

அதேவேளை இலங்கை ஐக்கியநாடுகளின் பொறுப்புக்கூறும் திட்டம் உட்பட ஐநாவின் மனித உரிமை பொறிமுறைகளுடன் முழுமையான ஒத்துழைப்பை பேணவேண்டும் இலங்கையின் மூன்று தசாப்த யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட பாரதுாரமான மனித உரிமை மீறல்கள், சர்வதேச சட்டத்தின் கீழான ஏனைய சட்ட மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் பல வருடங்களாக நீதிக்காக பொறுப்புக்கூறலிற்காக காத்திருக்கின்ற நிலையில் இலங்கை அரசாங்கம் இது குறித்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவேண்டும். (நி)

# தமிழர் விடுதலை கூட்டணி வன்னியில் வேட்பு மனு

(குருமன்காடு)

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவினை தமிழர் விடுதலைக்கூட்டணி நேற்று தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் நேற்றுக்காலை வேட்பு மனுவினை தாக்கல் செய்திருந்தது.

வன்னி மாவட்டத்தில் குறித்த கூட்டணியானது சந்திரகுமார் கண்ணனை முதன்மை வேட்பாளராகக் கொண்டு போட்டியிடுவதுடன் விசேட தேவையுடைய பெண் ஒருவரும் வேட்பாளராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-250)

# வன்னி மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி வேட்புமனு

(குருமன்காடு)

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்காக வைத்தியர் ப.சத்தியலிங்கம் தலைமையில் தமிழரசுக் கட்சி சார்பாக நேற்று முன்தினம் வேட்புமனுத் தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழரசுக்கட்சி வீட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் வன்னிக்கான வேட்பு மனுவினைத் தாக்கல் செய்தது.

வன்னிமாவட்டத்தில் தமிழரசுக்கட்சி சார்பாக கா.திருமுகன், தே.சிவானந்தராசா, பா.கலைதேவன் மற்றும் து.கவிரஜன், ந.ரவீந்திரகுமார், வ.கமலேஸ்வரன் ஆகியோரும் மன்னார் மாவட்டம் சார்பாக செ.டினேசன், அ.கலீபா ஹலீஸ்ரா ஆகியோர் வேட்பாளர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (6-250)

# றிசாட் வேட்பு மனு

(குருமன்காடு)

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவினை முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் தாக்கல் செய்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் றிசாட் பதியுதீன் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசிச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் நேற்றுக் காலை வேட்பு மனுவினைக் கையளித்துள்ளார். (6-250)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் வடக்கு-கிழக்கில் கனமழை

## கலாநிதி பிரதீபராஜா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் நாளை தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இது 15.10.2024 அன்று வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து அதன் பின் 18, 19 ஆம் திகதி அளவில் தமிழ் நாட்டின் வடக்கு பகுதிக்கும் ஆந்திராவின் தெற்கு பகுதிக்கும் இடையில் ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக கரையைக்கடக்கும் வாய்ப்புள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா அறிவித்துள்ளார்.

இத்தாழமுக்கத்தோடு இவ்வாண்டுக்கான வடகீழ் பருவக்காற்றின் உடைவும் ஏற்படும்.

எனவே நாளை முதல் 20.10.2014 வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இத்தாழமுக்கத்தோடு இணைந்து அதிக மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதனால் இவ்வாண்டுக்கான பெரும் போக நெற்செய்கைக்கான விதைப்பை மேற்கொள்பவர்கள் இந்த மழை நாட்களைக் கருத்தில் கொள்வது சிறந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# குடியிருக்க காணி தேவை

## மெனிக்பாம் மக்கள் போராட்டம்



(குருமன்காடு)

வவுனியா, செட்டிக்குளம், மெனிக்பாம் பிரதேச மக்கள் நேற்று முன்தினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து இருந்தனர்.

செட்டிக்குளம், மெனிக்பாம் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டு நீண்டகாலமாக இப் பிரதேசத்தில் வாழும் 70 இற்கும் மேற்பட்ட உப குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கான காணி வேண்டும் எனக் கோரியே குறித்த போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

சுமார் 8 வருடங்களுக்கு மேலாக உறவினர்கள் வீடுகளில் வசித்து வரும் இவர்களுக்கு காணி தருவதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ள போதும் இதுவரை தரவில்லை என போராட்டத்தின் போது அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர். (6-250)

# குடிநீர் திட்டத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் குடிநீர் திட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கலத் தொகுதி பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக அக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து சூரிய மின்கலத் தொகுதி பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனை விட இக் குடிநீர் திட்டத்தின் நீர்க் குழாய்கள் பல இடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டு இருப்பதன் காரணமாகவும் நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கெங்காதரன் குடியிருப்பிற்கான நீர் விநியோகம் தற்போது நடைபெறுவதில்லை. மேலும் அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் 700 வரையான குடும்பங்கள் உள்ள நிலையில் இக் குடிநீர் திட்டத்தின் மூலம் 250 வரை யான குடும்பங்கள் பெற்று வரு கின்றனர்.

எனவே குறித்த திருத்த வேலைப்பாடுகளை விரைந்து முன்னெடுக்குமாறு அக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 604





23 ஆம் அத்தியாயம்
வானதி

கொடும்பாளூர் இளவரசியின் அழகை வர்ணிக்கும்படி கவிஞர்களைக் கேட்டால் அவர்கள் அந்த மங்கை நல்லாளின் அழகை அந்தி மாலையின் சௌந்தரியத்துக்கு ஒப்பிடுவார்கள். பகற்பொழுது சென்று மாலை மங்கிவரும் போது மனதில் ஒரு சோகமுமேற்படுகிறது கூடவே ஓர் அமைதியான இன்பமும் தோன்றுகிறது.

ஆதவனின் இறுதிக் கிரணங்கள் மெலிந்து மறைந்த பிறகு, இரவின் இருள் நாலா புறமும் கவிந்து வருகிறது. இதனால் மனத்தில் தோன்றும் சோர்வைப் போக்கிக் கொள்வதற்கு வானத்தை நோக்கினால் போதும், கண்ணிமைக்கும் நேரத்தில் வான மாதேவி ஏற்றிவைக்கும் கோடான கோடிச் சுடர் விளக்குகள் எவ்வளவு ஆனந்தத்தை அளிக்கின்றன! சூரியனுடைய தகிக்கும் ஜோதியைப்போல் அவை கண்களைக் கூசச் செய்வதில்லையே? கண்களால் அவற்றைப் பார்த்து இன்புறலாமே? சந்திரனும் உதயமாகி விட்டாலோ, கேட்க வேண்டியதில்லையே.

முத்துச் சுடர்போன்ற முழுமதியின் நிலவில் உலகம் பூரிக்கிறது. உள்ளமும் உடலும் பூரிக்கின்றன. மாலை வந்ததும் தாமரைகள் கூம்புவது என்னவோ உண்மைதான். ஆனால் விண்மீன்களுடன் போட்டியிடுவது போல் மல்லிகை மொட்டுக்கள் வெடித்து மலர்ந்து அவற்றின் நறுமணத்தினால் வானமும் பூமியும் போதை கொள்கின்றன அல்லவா?

அஸ்தமித்ததும் பட்சிகளின் குதூகலத்தொனிகள் ஓய்ந்து விடுகின்றன என்பது உண்மைதான். ஆனால், அதோ தேவாலயத்திலிருந்து வரும் சேமக்கலச்சத்தமும், நாதஸ்வர வாத்தியத்தின் இன்னிசையும், இப்போது எவ்வளவு மதுரமாயிருக்கின்றன! மணிமாடங்களின் மீதிருந்து மென்மையான விரல்கள் மீட்டும் வீணையும், யாழும் எத்தகைய இன்ப கீதத்தை எழுப்புகின்றன!

கொடும்பாளூர் இளவரசி வானதியின் அழகில் இப்படியே சோகத்தின் சாயலும், களிப்பின் மெருகும் இனம் தெரியாதபடி கலந்து போயிருந்தன. அழகுக்கு ஒத்தபடி அவளுடைய சுபாவமும் இருவகைப்பட்டிருந்தது. ஒரு சமயம் அவளைப் பார்த்தால் துயரமே உருக்கொண்ட சந்திரமதியையும் சாவித்திரியையும் போல் இருக்கும்.

இன்னொரு சமயம் பார்த்தால் அரம்பையும் ஊர்வசியும் தேவருலகில் இப்படித்தான் ஆடிப்பாடிக்கொண்டு காதலில் களித்த மாதவியைப் போல் ஒரு சமயம் அவள் இன்ப உயிர்ச் சிலையாக விளங்குவாள். மற்றொரு சமயம் கணவனைப் பறிகொடுத்த கண்ணகியின் சோகவடிவம் இதுதானோ என்று கருதும்படி இருக்கும். ஒரு சமயம் மாலை வடிவேலரின் மையலுக்கு உள்ளாகி இதயம் கலந்து நின்ற வள்ளியைப்போல் தோன்றுவாள். இன்னொரு சமயம் தேவலோகமெல்லாம் களிக் கூத்தாடும்படி கார்த்திகேயருக்கு மாலையிட்டு மகிழ்ந்த தெய்வயானை இவளேதான் என்று எண்ணி மகிழும்படி ஆனந்த உருவாகி விளங்குவாள்.

சேர்ந்தாற்போல் பல தினங்கள் வானதியின் முகத்தில் ஒரு சிறு புன்னகையைக் கூடக் காணமுடியாது. வேறு சில நாட்களில் அவள் ஓயாது சிரித்துக் கொண்டேயிருப்பாள். அந்தச் சிரிப்பின் ஒலி கோடான கோடி நுண் துளிகளாகிக் காற்று வெளியில் கலந்து உலகத்தையே ஆனந்தப் பரவசப்படுத்தும். வானதியின் இத்தகைய இருவகைச் சுபாவத்துக்குக் காரணம் அவளுடைய பிறந்த வேளையும் வளர்ந்த காலமும் என்று ஊகிக்கலாம்.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்

பெருமுகை என்னும் கிராமம் மிகவும் வளமான ஊராகும். பச்சைப்பசேலென்று காட்சியளிக்கும் சிற்றூரில் இராமன் என்னும் சிறுவன் இருந்தான். சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்டான். அவனுடைய அப்பா அவனை மிகவும் செல்லமாகவே வளர்த்தார். பள்ளியில் படிக்கும் இராமன் எல்லோர் மனதையும் கவர்ந்து விட்டான்.



படிப்பிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினான். இலக்கியத்திலும் கணிதத்திலும் நாட்டஞ் செலுத்தினான். எல்லாப் பாடங்களிலும் முதல் மதிப்பெண்களை பெற்று ஆசிரியர்கள் அனைவருடைய பாராட்டுக்கும் உரியவன் ஆனான். ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று ஆறாம் வகுப்பில் சேர்ந்தான். ஆறாம் வகுப்பிலும் நன்றாகப் படித்து வந்தான். இராமன் மாலை நேரங்களில் வீணாகப் பொழுது போக்கும் பழக்கம் இல்லாதவன். நல்ல நூல்கள், நல்ல நண்பர்கள் என்னும் கருத்தை எண்ணிப் பாராட்டுவான்.

எனவே அவனைப் புத்தகமும் கையுமாகத்தான் பார்க்க முடியும். புத்தகம் இல்லாமல் எங்கும் வெளியில் போக மாட்டான். புத்தகம் படிக்கும் பழக்கத்தினால் இளமையிலேயே சிந்திக்கும் அனுபவம் மிக்கவனாய் திகழ்ந்தான்.

இராமன் அப்பாவின் மனம் கோணாமல் எங்கு போனாலும் வீட்டுப் பாடங்களைப் படித்து விடுவான். மாலையில் அவனுடைய அப்பாவிடம் தான் படித்து முடித்த பாடத்தைப்பற்றி கூறுவான். அப்பாவும் பொறுமையாகப் பதில் சொல்லுவார். "விளையும் பயிர் முளையிலே" எனும் பழமொழிக்கு உதாரணமாக இராமன் விளங்கினான்.

இராமன் ஊர் மக்களிற்கு உதவி செய்வதிலும் விருப்பம் உடையவனாக வளர்ந்தான். நோயுற்ற பெரியவர்களுக்கு மருந்து வாங்கிக் கொடுப்பான். கண் தெரியாதவர்களுக்கு சாலையைக் கடக்க உதவி செய்வான். சின்னக் குழந்தைகளை எல்லாம் தன்னோடு அழைத்துச் சென்று அவரவர் படிக்கும் பள்ளியில் விட்டுவிட்டு தனது பள்ளிக்கு உரிய நேரத்தில் செல்வான்.

இராமனின் நல்ல பண்புகளை ஊரார் பாராட்டிப் பேசுவார்கள். பாராட்டு பேச்சுக்களைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தன்னால் முடிந்த உதவி களைச் செய்து வந்தான்.

ஒருநாள் மாலையில் பாலாற்றங்கரையோரமாக இருந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தேசிக விநாயகப் பிள்ளையின் மலரும் மாலையும் எனும் நூலின் கவிதைகளை படித்துக் கொண்டிருந்தார். திடீரென "காப்பாத்துங்க, காப்பாத்துங்க' என்னும் அலறல் குரல் கேட்டுத் திடுக்கிட்டான். குரல் வந்த திசையைப் பார்த்தான். அங்கே ஒரு சிறுவன் பாலாற்றங்கரையோரம் ஒரு புதை குழியில் விழுந்து அவதிப்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு அலறினான்.

செய்வதறியாது தடுமாறினான். சுற்றும் முற்றும் ஓடினான் புதை குழியில் விழுந்து தவிக்கும் சிறுவனை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும் என்ற ஆர்வத்தில் அருகிருந்த ஒரு பெரிய மூங்கிலை எடுத்து சிறுவனை பிடித்துக் கொள்ளுமாறு சொன்னான். அவனும் மூங்கிலைப் பிடித்துக் கரை சேர்ந்தான்.

(தொடரும்...)

ஜெ.நிதுஷனா
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைக்கற்களை உடைப்பதில் நேரத்தை வீணடிக்காது, அதை குதித்துத் தாண்டி முன்னேறிச் செல்லுங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் திருவிழாவில் இத்தனை உபயகாரர்களா!

2024 பொதுத் தேர்தல் திருவிழாவில் யாழ். மாவட்டம் மற்றும் வன்னி மாவட்டத்தில் உபயகாரர்களின் எண்ணிக்கை கின்னஸ் சாதனையைத் தொடும் அளவுக்கு உச்சம் பெற்றுள்ளது.

அதிலும் இலங்கையின் ஏனைய மாகாணங்களை விட, வட மாகாணத்திலேயே எண்ணிறைந்த கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் தேர்தலில் களமிறங்கியுள்ளன எனலாம்.

இவ்வாறானதொரு நிலைமை எதற்கான தென்பதுதான் புரியவில்லை.

சிலவேளைகளில் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படாமல் இருந்திருந்தால், இப்படியானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காதோ என்றுகூட எண்ணத் தோன்றும்.

எதுவாயினும் தமிழ் அரசியலில் ஏற்பட்ட வெற்றிடமும் ஏலவே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தமிழ் அரசியல்வாதிகள் மீதான அதிருப்தியும் இவ்வாறானதொரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளதெனக் கருத்துரைத்தால், அதில் நியாயம் இருக்கவே செய்யும்.

இதையும் கடந்து, யாழ்ப்பாண மாவட்டத்தில் பாராளுமன்ற ஆசனம் ஆறு என்ற மிகக் குறைந்த எண்ணிக்கையைக் கொண்டிருப்பதால், தமிழ் அரசியல் கட்சிகளால் தமது கட்சிப் பிரமுகர்களுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பைக் கொடுக்க முடியவில்லை. இதுவும் அதிகளவான சுயேட்சைக் குழுக்களைக் களமிறக்கக் காரணமாயிற்று.

எல்லாவற்றுக்கும் மேலாக, கட்சியின் முக்கிய தலைகள் தமது வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டு செயற்பட்டதால், முக்கியமான அரசியல் பிரமுகர்களை வெளியில் விட வேண்டிய தேவை இருந்ததென்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

சரி, ஒரு பெரும் உபயகாரர்கள் வட மாகாணத் தேர்தல் திருவிழாவைச் செய்யத் துணிந்து விட்டனர்.

இனி தேர்தல் திருவிழாவில் அவர்கள் தமது கலைநிகழ்வுகளை ஆற்றுகை செய்வர்.

மேடைப் பேச்சுக்கள், எதிர்த் தரப்புகளின் தோலை உரித்துத் தொங்க விடுகின்ற விசேட நிகழ்வுகள்.

கூட இருந்தபோது; சேர்ந்து செய்த திருகுதாளங்களை, பெருமாள் கோவில்களில் இடம்பெறும் உறி அடி போல கண்ணைக் கட்டி தடியால் அடிக்கின்ற அருங்காட்சிகள் என இன்னும் ஏகப்பட்டவை இடம்பெறும்.

இவையாவற்றுக்கும் ஒலி, ஒளி, விசேட மேளக் கச்சேரிபோல முகநூல், ரிக்ரொக் உள்ளிட்ட சமூகவலைத்தளங்களின் வறுத்தெடுப்புகள்.

அடடா! எல்லாவற்றையும் கண்டுகளித்த ரசிகப் பெருமக்கள் யாருடைய திருவிழா சிறப்பாக இருக்கிறதெனக் கணித்து, அந்தந்த திருவிழா உபயகாரர்களுக்கு தங்களின் மதிப்பெண்களை வழங்குவர்.

# சுகாதார அமைச்சில் இடம்பெற்ற பாரிய ஊழல், மோசடிகள்

## விசேட குழுவை நியமிக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

சுகாதார அமைச்சிற்குள் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகளை விசாரணை செய்ய உடனடியாக விசேட குழுவொன்றை நியமிக்குமாறு பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை சுகாதாரத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பிலான தகவல்களை மேற்படி குழுவிற்கு வழங்கத் தயாராக உள்ளதாக சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம கூறியுள்ளார்.

தற்போதைய பிரதமர் சுகாதார அமைச்சராகவும் பணியாற்றி வருகிறார். அதனால் அவரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

கடந்த காலங்களில் அதிக அளவில் ஊழல், மோசடிகள் அமைச்சுக்குள் இடம்பெற்றுள்ளன. புதிய ஜனாதிபதியும், சுகாதார அமைச்சராக கடமையாற்றும் பிரதமரும் இவ்விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய ஜனாதிபதியும் சுகாதார அமைச்சரும் விசாரணை நடத்த குழுவொன்றை நியமிப்பதற்கு உடனடியாகச் செயற்படுவார்கள் என நம்புகின்றோம். நியமிக்கப்படும் குழு கடந்த காலத்தில் இருந்தவை போன்று இருக்கக் கூடாது. அது சுயாதீன குழுவாக இருக்க வேண்டும்.

சுகாதாரப் பாதுகாப்பு தொழிற்சங்கத் தலைவர்களும், சுகாதாரப் பணியாளர்களும் தாம் அறிந்த மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டும் என்றும் சானக தர்மவிக்ரம வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## நடுவானில் தொழில் நுட்பக்கோளாறு

## விமானியின் சாமர்த்தியத்தால் காப்பாற்றப்பட்ட 141 பயணிகள்

(திருச்சி)

தொழில் நுட்பக் கோளாறால் 2 மணி நேரம் வானத்திலேயே வட்டமடித்த திருச்சி-சார்ஜா விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஏர் இந்தியா விமானம் ஒன்று 141 பயணிகளை ஏற்றிக் கொண்டு நேற்று மாலை 5.40 மணிக்கு புறப்பட்டது. விமானம் மேலே எழும்பியும் அதன் சக்கரங்கள் உள்ளே செல்லவில்லை. இதனால், விமானத்தினை தொடர்ந்து பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது இந்நிலையில் விமானியின் சாதுர்யமான முயற்சியினாலும் கடும் பிரயத்தனத்தினாலும் விமானம், விமானத்தின் எரிபொருள் தீரும்வரை சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேல் வானில் வட்டமடித்து விட்டு இரவு 8.15 மணியளவில் பாதுகாப்பாக மீண்டும் திருச்சி விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. விமானியின் சாதுர்யத்திற்குத் தமிழக முதலமைச்சர் உள்ளிட்ட பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர். (ம-7)

## 17 அரசியல் கட்சிகள் 14 சுயேட்சைக் குழுக்கள்

### திருகோணமலையில் களத்தில்

(திருகோணமலை)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 20 அரசியல் கட்சிகள், 17 சுயேட்சை குழுக்கள் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தன.

அவற்றில் 17 அரசியல் கட்சிகளும் 14 சுயேட்சை குழுக்களும் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அதேவேளை மூன்று கட்சிகளும் மூன்று சுயேட்சைக் குழுக்களும் நிராகரிக் கப்பட்டதாக திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் தெரிவித்தார்.

வேட்புமனுவின் பின் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய ஜனநாயக முன்னணி, அகில இலங்கை தமிழர் மகாசபை, ஐக்கிய தேசிய சுதந்திர கூட்டமைப்பு உட்பட மூன்று சுயேட்சை குழுக்களுமே இவ்வாறு நிராகரிக்கப்பட்டன.

சத்தியக் கடதாசி சமர்ப்பிக்காமை, சரியான முறையில் விண்ணப்பத்தை கையளிக்காமை உள்ளிட்ட காரணங்களால் இந்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

கடந்த 4ஆம் திகதி தொடக்கம் நேற்று மதியம் 12 மணி வரை இந்த வேட்புமனு தாக்கல் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

2,15,000 அமெரிக்க பெறுமதியான

## இரசாயன விஷம் கலந்த ரின்மீன் கண்டுபிடிப்பு

ஒருகொடவத்தையில் இரசாயன விஷம் கலந்த ரின்மீன் தொகை சுங்கக் களஞ்சியத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி 2 இலட்சத்து 15 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

நச்சுத்தன்மை வாய்ந்த ரின் மீன்களை, சுற்றாடல், வனவிலங்கு, வன வளங்கள், நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி நேற்று வெள்ளிக்கிழமை பார்வையிட்டார்.

இலங்கையில் ரின்களில் அடைக்கப்பட்ட மீன்களின் இருப்பு அழிக்கப்படமாட்டாது என தெரிவித்த பிரபாத் சந்திரகீர்த்தி, இவற்றை மீள் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மற்றும்சோதனைகளை இலங்கை சுங்கப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## அரச உத்தியோகபூர்வ இல்லத்திற்கு பின்னால் சடலம் மீட்பு

கண்டி அஸ்கிரிய பொலிஸ் விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக உள்ள அரச உத்தியோகபூர்வ இல்லத்திற்கு பின்னால் சடலமொன்றை கண்டி தலைமையக பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லம் தற்போது மிகவும் பாழடைந்த நிலையில் காணப்படுவதுடன் வீட்டின் பின்புறத்தில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் இது சுமார் ஒரு வாரத்திற்கு முன்னர் உயிரிழந்த ஒருவருடையது என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் கண்டி தலைமையக பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், நேற்று சட்ட வைத்திய அதிகாரியை ஸ்தலத்திற்கு வரவழைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## வியாழேந்திரனின் வேட்புமனு நிராகரிப்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஜனநாயக தேசிய முன்னணிக் கட்சியின் சார்பில் கையளித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்யும் செயற்பாடுகள் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவுக்கு வந்துள்ளன.

இந்நிலையில், சத்தியக் கடதாசியை சமர்ப்பிக்க தவறியமையினால் வியாழேந்திரனின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I



**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

03

**இரண்டாவதுஇலங்கை அரசசபைத் தேர்தல் 1936**

இதே எல்லை நிர்ணயத்தின் படி இரண்டாவது இலங்கை அரச சபைத் தேர்தல் 1936ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றது. இவ் அரச சபையின் காலம் 11 வருடம் 3 மாதமாகும். 5 வருட முடிவில் நடைபெற வேண்டிய மூன்றாவது தேர்தல், 1941 இல் 2ஆம் உலகப் போர்ச்சூழல் காரணமாக நடைபெறவில்லை.

இரண்டாவது இலங்கை அரச சபைத் தேர்தலில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் பின்வருமாறு காணப்பட்டது:- தாழ் பிரதேசச் சிங்களவர் -31,கண்டிச் சிங்களவர் -8 இலங்கைத் தமிழர்கள் -8, இந்தியத் தமிழர்கள்-2 ஐரோப்பியர் - 1 , ஆளுநர்,4- ஐரோப்பியர் 1-, பறங்கியர் 1-, இந்தியர் 1-, மலே இனத்தவர் 1- முஸ்லீம் என்ற ரீதியில் மற்றைய எட்டு இடங்களுக்கும் நியமனம் செய்தார். தேர்தலில் எந்தவொரு முஸ்லீம் உறுப்பினரும் தெரிவு செய்யப்படாத காரணத்தால் இவ் அரச சபைக்கு முஸ்லீம் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் 1942ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற மத்திய கொழும்பு தேர்தல் தொகுதிக்கான இடைத்தேர்தலில் முஸ்லீமொருவர் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

**சோல்பரி அரசியல் அமைப்பு**

இலங்கையரின் திருப்தியின்மையின் கீழ்செயற்பட்ட இரண்டாவதும் இறுதியுமான இலங்கை அரசு சபை 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் திகதி கலைக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டில் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட ஆறாவது அரசியலமைப்பான சோல்பரி அரசியலமைப்பின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் சபைப் (பாராளுமன்றம்) பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்றது.

**எல்.எம். டி. த. சில்வா எல்லை நிர்ணய ஆணைக்குழுவும் அதன் கடமைகளும் பொறுப்புக்களும்**

இலங்கை மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் நோக்கோடு சோல்பரி ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட அரசியல்யாப்புச் சீர்திருத்தம்- 1946ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்ததோடு, 1946 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி எல்.எம். டி.த.சில்வா எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அன்றைய அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் பகுதிகள் IV மற்றும் IX களில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும் விதந்துரைக்கப்பட்டிருந்தன.

அவையாவன எல்லை நிர்ணய ஆணைக்குழு அங்கத்தவர்கள் அரசியற் சார்பற்றவர்களாக இருக்க வேண்டும். இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றையும் பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கும் கடமை இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்களிலும் வேறுபட்ட இன்னொரு சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் அப்பரந்த பிரதேசத்தின் சில இடங்களில் கூடுதலாகச் சேர்ந்து வாழ்ந்தால், அச் சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் வரக்கூடியதாக தேர்தல் தொகுதிகள் அமைய வேண்டும்.

தேவையானவிடத்து பல் அங்கத்தவர்கள் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கவேண்டும். இனங்களுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்காக மாகாண மட்டத்தில் 1931 ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் 75,000இற்கு கிட்டிய மக்களை கொண்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் மாகாண அடிப்படையில் ஒவ்வொரு 1000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்திற்கு ஒரு பிரதிநிதியை வழங்கும் பொருட்டு தொகுதிகளைப் பிரித்தல் வேண்டும் என்பனவாகும்.

**மாகாணங்களுக்கான தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை**

இதன்படி மாகாணத்தின் விஸ்தீரணத்தை (பரப்பளவை) மூலதாரமாகக் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டபோது மாகாணத்துப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம் -1, மத்திய மாகாணம் -2, தென் மாகாணம் -2, வட மாகாணம் -4, கீழ் மாகாணம் - 4, வடமேல் மாகாணம் -3, வட மத்திய மாகாணம் -4, ஊவா மாகாணம் -3 மற்றும் சப்பிரகமுவ மாகாணம்-2. மொத்தம் -25 உறுப்பினர்கள்.

விஸ்தீரணம் மற்றும் சனத்தொகை அடிப்படையில் மாகாண மட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம் -20, மத்திய மாகாணம் -15, தென் மாகாணம் -12, வட மாகாணம் -9, கீழ் மாகாணம் -7, வடமேல் மாகாணம் -10, வட மத்திய மாகாணம் -5, ஊவா மாகாணம் -7 மற்றும் சப்பிரகமுவ மாகாணம் -10, மொத்தம் -95 உறுப்பினர்கள்.

அரசியல்யாப்புச் சீர்திருத்தத்தின் பகுதிகள் IV மற்றும் IX களில் மேலும் சில கடமைகளும் பொறுப்புக்களும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவுக்கு விதந்துரைக்கப்பட்டிருந்தன. அவையாவன மாகாண மட்டத்தில் பல அங்கத்தவர்கள் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டாலும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 95 ஆக இருத்தல் வேண்டும்.

இவ் வரம்புகளை மீறாது புவியியல் அம்சங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை கருத்தில் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயம் செய்யப்படவேண்டும், தேர்தல் தொகுதிகளுக்குப் பெயரிடல் என்பனவாகும்.

இவ் எல்லை நிர்ணயத்தின் படிதான் 1947, 1952, மற்றும் 1956களில் மூன்று பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன.

சிறுபான்மை இனத்தவர்களின் பிரதிநிதித்துவம் பற்றி எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

குழுவின் எல்லை நிர்ணயத்தின் படி, வட மாகாணத்தின் 9 தொகுதிகளிலும் கிழக்கு மாகாணத்தில் 4 தொகுதிகளிலுமாக மொத்தம் 13 தொகுதிகளில் இலங்கைத் தமிழர்கள் வெல்லமுடியுமென்றும் மேலும் மேல் மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து இந்திய மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஆதரவுடன் தமிழர் ஒருவர் வெற்றி பெற வாய்ப்புள்ளதாகவும் சொல்லியிருந்தார்கள்.

இந்தியத்தமிழர்களுக்கு எட்டுத் .தொகுதிகள் கிடைக்கவேண்டும் அதில் ஏழு தொகுதிகள் பின்வருமாறு எல்லை நிர்ணயம்செய்யப்பட்டது. மத்திய மாகாணத்தில் நுவரெலியா தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 26%, இலங்கைத் தமிழர்- 9%, இந்தியத் தமிழர்- 59%, முஸ்லீம்-3%, ஏனையோர்-3%), தலவாக்கலை தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 7%, இலங்கைத் தமிழர்- 9%, இந்தியத்தமிழர்- 80%, முஸ்லீம்- 2%, ஏனையோர்-2%), கொட்டகலை தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 27%, இலங்கைத் தமிழர்- 15%, இந்தியத்தமிழர்- 54%, முஸ்லீம்-3%, ஏனையோர்- 1%), மஸ்கெலியா தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 23%, இலங்கைத் தமிழர்- 13%, இந்தியத்தமிழர்- 61%, முஸ்லீம்-1%, ஏனையோர்-2%), நாவலப்பிட்டி தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 23%, இலங்கைத் தமிழர்- 14%, இந்தியத்தமிழர்- 51%, முஸ்லீம்-5%, ஏனையோர்- 7%) ஆகிய ஐந்து தொகுதிகளும் ஊவா மாகாணத்தில்பதுளை இரட்டை அங்கத்தவர்கள் தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 44%, இலங்கைத் தமிழர்- 8%, இந்தியத்தமிழர்- 42%, முஸ்லீம்- 3%, ஏனையோர்-3%). ஹப்புத்தளைத் தொகுதி (சனத்தொகை வீதம் - சிங்களவர்- 32%, இலங்கைத் தமிழர்- 6%, இந்தியத் தமிழர்- 57%, முஸ்லீம்-2%, ஏனையோர்-3%) ஆகிய இரு தொகுதிகளும் உருவாக்கப்பட்டன.

மேல் மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து இந்தியத் தமிழர்களின் சதவீதம் (25%) இலங்கைத் தமிழர்களின் சதவீதத்தை (16%) விட கூடுதலாக விருப்பதால் இந்தியத் தமிழரை போட்டியிடச்செய்வதால் இந்தியத் தமிழர் ஒருவர் வெற்றிபெற வாய்ப்புள்ளதாகவும் சொல்லியிருந்தார்கள். (குறிப்பு- அவர்கள் குறிப்பிட்டபடி மத்திய கொழும்பிலிருந்து தமிழர்கள் ஒருபோதும் தெரிவு செய்யப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் இடதுசாரி அரசியல்வாதியான பீட்டர் கெனமனுக்கு தமிழர்களின் ஆதரவு இருந்ததும் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை முதலாவது தேர்தலின் பின் இரத்துச் செய்யப்பட்டதுமாகும்.)

முஸ்லீம் சமூகத்திற்கு ஆறு தொகுதிகள் கிடைக்கவேண்டும். முஸ்லீம் சமூகம் மாகாணங்களில் சிதறி வாழ்ந்ததால் அவர்களுக்கு ஆறு தொகுதிகள் ஒதுக்க முடியவில்லை என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் மூன்று தொகுதிகளும் ( மூதூர், கல்முனை மற்றும் பொத்துவில்) மேல் மாகாணத்தில் மூன்று அங்கத்தவர்கள் தொகுதியான மத்திய கொழும்பிலிருந்து முஸ்லீம் ஒருவர் வெற்றி பெறக்கூடியதாக நான்காவது தொகுதியும் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.அம்பலாங்கொடை- பலப்பிட்டிய, பலாங்கொடை மற்றும் கடுகண்ணாவை ஆகிய இரட்டை அங்கத்தவரகள் தொகுதிகள் சாதி,போக்குவரத்து வசதி போன்ற காரணங்களை முன்னிலைப்படுத்தி மக்களின் வேண்டுதலுக்கமைய உருவாக்கப்பட்டவையாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்து...

அல்வாய் தெற்கு, அல்வாயைச் சேர்ந்த சதீஷ் சுஷ்யந்தினி தம்பதியருக்கு கடந்த 8ஆம் திகதி காலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

உடல் நலக்குறைவு காரணமாக மறுநாள் 9ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தை அனுமதிக்கப்பட்ட நிலையில் பிற்பகல் உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஜனநாயகத்...

எனும் பெயரில் புதிதாக உருவாக்கப்பட்ட கட்சி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடவுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் இந்தச் சுயேட்சைக் குழுவுக்கான வேட்பாளர்கள் வேட்புமனுவில் நேற்று முன்தினம் மாலை கையொப்பமிட்டனர்.

இதில் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், முன்னாள் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணி செயலாளர் விமலேஸ்வரி, முன்னாள் போராளி வைத்திலிங்கம் பாலசுரேஷ் உள்ளிட்ட 9 பேர் கையொப்பமிட்டனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளனர் என்று அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார். (ம-7)

## யாழில் 6...

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகள், 23 சுயேட்சைக் குழுக்கள் என மொத்தமாக 46 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன என்றும், அவற்றில் இரண்டு சுயேட்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அந்த அடிப்படையில் 23 அரசியல் கட்சிகளும், 21 சுயேட்சைக் குழுக்களும் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களாக 396 பேர் போட்டியிடவுள்ளனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 5 இலட்சத்து 93 ஆயிரத்து 187 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் உதவி தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், கிளிநொச்சி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் முரளிதரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,33)

## வன்னி...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு 22 கட்சிகள் மற்றும் 25 சுயேட்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் நான்கு குழுக்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபரும் தேர்தல் தெரிவித்தாட்சி அலுவலருமான பீ.ஏ.சரத் சந்திர தெரிவித்தார்.

அந்தவகையில் இம்முறை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 24 அரசியல் கட்சிகளும் 27 சுயேட்சைக்குழுக்கள் என மொத்தமாக 51குழுக்கள் வேட்பு மனுக்களை கையளித்திருந்தன.

அவற்றில் இரண்டு அரசியல் கட்சிகள் மற்றும் இரண்டு சுயேட்சைக் குழுக்களினது விண்ணப்பங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத மற்றும் கையளிக்கப்படாத காரணத்தினால் தேர்தல் அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக எங்கள் மக்கள் சக்தி மற்றும் சிறிரெலோ கட்சியின் ப.உதயராசா போட்டியிடவிருந்த ஜனநாயகத் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 22 அரசியல் கட்சிகள் மற்றும் 25 சுயேட்சைக் குழுக்களின் விண்ணப்பங்களும் என 47 ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை 2024 ஆம் ஆண்டிற்கான பொதுத் தேர்தலில் 6 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 423 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## 22...

கரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஏதேனும்அநீதிகள் இடம்பெற்றுள்ளதாக உணர்ந்தால் அந்தக் குழுக்கள் நீதிமன்றிற்குச்செல்ல முடியும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான அரசியல் குழுக்கள் போட்டியிடுவதுடன்,அதன் எண்ணிக்கை 64 ஆகும்.

மொனராகலை மற்றும் பொலநறுவைத் தேர்தல் மாவட்டங்களில் குறைந்த எண்ணிக்கையிலான அணிகள் போட்டியிடுவதுடன், அங்கு தலா 15 அணிகள் போட்டியிடுகின்றன.

2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்தது.

எதிர்காலத்தில் விருப்பு வாக்கு இலக்கங்கள் வழங்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தமிழர்...

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை நேற்று கையளித்தனர்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வீ.ஆனந்தசங்கரியை முதன்மை வேட்பாளராகக் குறிப்பிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்டச் செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உதயசூரியன் சின்னத்தில் களமிறங்குகின்றனர்.

91 வயதாகும் ஆனந்தசங்கரியே இலங்கையில் அதிகூடிய வயதில் போட்டியிடும் வேட்பாளர் ஆவார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.10.11
சீட்டிழுப்பு இலக்கம் 5622
G 0 7 5 8 4 3
அத சம்பத
G 5 8 4 3
சீட்டிழுப்பு இலக்கம் 197
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.10.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1652
O 23 28 46 47 O
Double Chance 69312

மெகா பவர்
திகதி 11/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1970
X 24 24 25 37 72
63335

லக்கி 7 VIP
திகதி 2024.10.11
சீட்டிழுப்பு இலக்கம் 0448
X 1 3 3 9 7 6 X

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3864
சீட்டிழுப்பு திகதி 11.10.2024
E 06 45 58 66
E 96416

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.11
சீட்டிழுப்பு இலக்கம் 931
கடகம் 11 41 44 54 கடகம்
08943 22

உத்தியோகபூர்வ முடிவுகள்
11.10.2024 வெற்றி வாரம் 330
R 3 6 0 9 2 5
74014
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,595,280.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2596 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 11.10.2024 தினம் வெள்ளி
17 20 62 72 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,496,053.60

சனிதா
திகதி 2024.10.11 வெற்றி வாரம் 4757
13 39 50 67 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,736,772.80
ரூ.100,000/- 63973

சசிரி
539
2024.10.11
பச்சை
31 33 50
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,851,920/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4308 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.10.11 தினம் வெள்ளிக்கிழமை
16 27 45 56 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,955,770.40
187097

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 34 01 16 22 71
1772
இள கபில
11.10.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 549,875,737.80

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2422
சீட்டிழுப்பு திகதி : 2024.10.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,676,223.20
ADA KOTIPATHI
35 41 50 75 W
963226


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்
## உயர்நிலைக் கல்லூரி
**AHARAM HIGH STANDARD COLLEGE**
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

## புதிய கல்வி ஆண்டு -2024
புலமைப்பிரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்
12.10.2024 (சனிக்கிழமை)
விஜயதசமி நன்னாள் அன்று மாலை 3.02 - 4.32
அனுமதிகளை 09.10.2024 இருந்து பெற்றுக் கொள்ளலாம்

குறிப்பு :
ஆரம்பிக்கும் நாள் முதல் தைமாதம் வரை நடைபெறும் வகுப்புக்களிற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டா!

(2251)

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"



# செம்மொழி
## கல்வியகம் தாவடி
தாவடிப் பாடசாலைக்கு அருகில்

## தமிழ்மொழியும் இலக்கியமும்
தரம் 6 ற்கான புதிய வகுப்பு

இன்று விஜயதசமி நன்நாளில் மாலை - 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
(தை மாதம் வரை கட்டணம் அறவிடப்படமாட்டாது.)

(2227)

ஆ.பிருந்தாபன்
**077 255 0807**



# விவசாயிகளுக்கு



சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய, இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

அத்துடன்



இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர். பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

ஆர்க். என். கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(2280)

Hotline : 071 535 7799/ 071 973 9917



# யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்
யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(419)

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



# அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2026ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226244
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 05-11-2024
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0777068777 | கொடிகாமம் 0764550675 | சாவகச்சேரி 0768226242 | [illegible] 0768226238 |
| [illegible] 0764550670 | பண்டத்தரிப்பு 0777718322 | சங்கானை 0777726322 | கோப்பாய் 0764550674 | புத்தூர் 0764550671 | [illegible] 0777720322 |
| நெல்லியடி 0776699892 | V2 Travels | | வேலணை 0743900353 | பருத்தித்துறை 0768226230 | [illegible] 0776697960 |



# மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த1983 இல் பிறந்த 41 வயதுடைய டென்மார்க் பிரஜாவுரிமையுடைய டுபாயில் விமானி Captain ஆக தொழில்புரியும் விவாகரத்தான மணமகனுக்கு 30 - 35 வயதிற்கு இடைப்பட்ட ஓரளவு கல்விகற்ற ஆங்கிலம் தெரிந்த மணமகள் தேவை.

(2281)

Whatsapp:- 0045 222 60771



# English Classes
தனி மற்றும் குழு வகுப்புகள்
அல்லது
**Zoom** மூலமாகவும்

Students (Gr 1 to O/L)
University students
and
For workers

Let's Learn
- Speaking
- Grammar
- Monthly exams

(2256)

**077 331 4608**



# காணி தேவை
பூநகரி, மன்னார், கிளிநொச்சிப் பகுதிகளில் நிலப்பரப்பு உறுதிக் காணி தேவை.
**077 374 4652**

(420)




# சிங்கள வகுப்பு
2025 தரம் 6, 7, 8, 9 மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்களத்திற்கான புதிய வகுப்புகள் விஜயதசமி (12.10.2024) மாலை மூன்று மணிக்கு ஆரம்பமாகும்.
அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.

இடம் : இலங்கை வேந்தன் மண்டபம்
அருகில் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(2273)

077 990 8867
077 214 0220


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 - 09 - 1975 | 18 - 09 - 2024 |

## இளையகுட்டி புவனராஜ் (பவுணன்)

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி புவனராஜ் (பவுணன்) அவர்கள் கடந்த 18.09.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டி - றோகினி தம்பதியரின் அன்பு மகனும் சின்னையா - கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் பிரியா அவர்களின் பாசமிகு கணவரும் கவினா, ஆக்விக், ஆருசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற வாசன் மற்றும் இலங்கேஸ்வரன், வனிதா, சிவகுமார், தர்மரூபன், கலைவாணி, வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தாரணி, நிரோசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் France Joncherolles 95 rue Marcel Sembat - 93430 villetaneuse இல் 14.10.2024 திங்கட்கிழமை அன்று நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
ஏழாலை.

(2276)


# Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 237/= |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= |
| 1Kg தீட்டல் பச்சை | - 225/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 380/= |
| 1Kg சம்பா அரிசி | - 228/= |
| 1Kg கீரி சம்பா | - 248/= |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 790/= |
| 1Kg செத்தல் மிளகாய் No1 | - 860/= |
| 1Kg மல்லி | - 380/= |
| 1Kg சோயா | - 440/= |
| 10Kg விஜிதா குத்தரிசி | - 2530/= |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 690/= |
| 750 ml Vsp நல்லெண்ணை | - 1460/= ~~1550/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3390/= ~~3900/=~~ |

400g Anchor
1000/=



~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(419)

Happy Supermarket
0777 8080 30



# Vacancies
யாழ்ப்பாணத்தில் இயங்கும் Engineering Company இல் கீழ்க் காணும் பதவிகளுக்கு வெற்றிடம் காணப்படுகின்றது.

1. **Mechanical Engineer - 01 no**
   freshers are welcome with the sound Knowledge on AutoCAD 3D, Solidwork, ANSYS or any other Mechanical design Software
2. **Account Executive - 01 no**
   freshers and undergraduates are welcome
3. **Lathe machine operators - 02 no**(கடைச்சல் வேலை)
4. **Mechanical Fitters - 02 no** (மெசின் பொருத்துனர்)
5. **Welder (MIG, TIG, ARC) - 02 no**(வெல்டர்)

பதவி 1, 2 க்கு தகுதியானவர்கள் தமது CV இனை K.Amirthalingam, paruthikaloddy, Chunnakam என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.
பதவி 3,4,5 க்கு **077 563 2257** இற்கு தொடர்பு கொள்ளவும்.

(2282)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.